MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY (MAV) DEPARTMENT.

## APPENDIX

## NOTIFICATION

Whereas the State Government is of opinion that the Rajapalayam Municipal Council persistently makes default in performing duties imposed on it by law,

And Whereas, the explanations of the Rajapalayam Municipal Council have been called for under sub–section (1-A) of Section 41 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) and its explanations have been considered by the State Government;

And Whereas it is considered that there is reasonable basis to dissolve the said Municipal Council;

Now, therefore, in exercise of powers conferred by sub-section (1) of Section 41 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby dissolves the Rajapalayam Municipal Council with immediate effect and also directs that the said Municipal Council shall be reconstituted with effect from the 20th March, 2009.

And, in exercise of the powers conferred by clause (b) of sub-section (3) of Section 41 of the said Act, the Governor of Tamil Nadu hereby appoints the Regional Director of Municipal Administration, Tirunelveli, to exercise and perform all the functions of the Rajapalayam Municipal Council and its Chairman during the period of dissolution of the said Municipal Council.

K. DEENABANDU,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

//True Copy//

L. Radha
15-10-2008
UNDER SECRETARY TO GOVERNMENT.

©

GOVERNMENT OF TAMIL NADU
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 306] CHENNAI, WEDNESDAY, OCTOBER 15, 2008
Purattasi 29, Thiruvalluvar Aandu–2039

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

---

### NOTIFICATIONS BY GOVERNMENT

---

### MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT

DISSOLUTION OF RAJAPALAYAM MUNICIPAL COUNCIL, RECONSTITUTION OF THE SAME WITH EFFECT FROM THE 20th MARCH 2009 AND APPOINTMENT OF THE REGIONAL DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION, TIRUNELVELI TO EXERCISE AND PERFORM ALL FUNCTIONS OF SAID MUNICIPAL COUNCIL AND ITS CHAIRMAN DURING THE PERIOD OF DISSOLUTION OF THE SAID MUNICIPAL COUNCIL.

*[அரசாணை (நிலை) எண் 200, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை, 15 அக்டோபர் 2008, புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு–2039.]*

**No. II(2)/MAWS/485(a)/2008.**

Whereas, the State Government is of opinion that the Rajapalayam Municipal Council persistently makes default in performing duties imposed on it by law ;

And, Whereas, the explanations of the Rajapalayam Municipal Council have been called for under sub-section (1-A) of Section 41 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) and its explanations have been considered by the State Government ;

And, Whereas, it is considered that there is reasonable basis to dissolve the said Municipal Council ;

Now, therefore, in exercise of powers conferred by sub-section (1) of Section 41 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby dissolves the Rajapalayam Municipal Council with immediate effect and also directs that the said Municipal Council shall be reconstituted with effect from the 20th March, 2009.

And, in exercise of the powers conferred by clause (b) of sub-section (3) of Section 41 of the said Act, the Governor of Tamil Nadu hereby appoints the Regional Director of Municipal Administration, Tirunelveli, to exercise and perform all the functions of the Rajapalayam Municipal Council and its Chairman during the period of dissolution of the said Municipal Council.

K. DEENABANDU,
*Principal Secretary to Government.*

PRINTED AND PUBLISHED BY THE PRINCIPAL SECRETARY TO GOVERNMENT AND COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU
DTP—II-2 Ex. (306)

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
17 OCT 2008
சென்னை-600 005

சுருக்கம்

இராஜபாளையம் நகர்மன்றம் - முறையாக செயல்படாமை – விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டதற்காக நகர்மன்றத்தினை கலைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை

அரசாணை (நிலை) எண். 200 நாள் 15.10.2008.

திருவள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாசி 29

படிக்க:

1. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ஆர்.ஓ.சி. எண்.10981/2008/ எம்3 நாள் 23.4.2008.
2. அரசு கடித எண்.3303/நநி.5/ 2008-13, நாள் 7.5.2008.
3. இராஜபாளையம் நகர்மன்றத் தலைவி கடிதம் நாள் 17.5.2008.
4. சென்னை உயர்நீதிமன்ற ஆணை நீதிப்பேராணை எண். (W.P.No)12769/ 2008 மற்றும் பலவகை மனு எண். (M.P.No.) 2/2008, தீர்ப்பு நாள் 27.7.2008.
5. சென்னை உயர்நீதிமன்ற ஆணை நீதிபேராணை எண்.12769/ 2008 மற்றும் 12770/2008 மற்றும் பலவகை மனு எண்.M.P.No.1 மற்றும் 2 தீர்ப்பு நாள் 9.7.2008.
6. இராஜபாளையம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் 22 நகர்மன்ற உறுப்பினர்களின் கடிதம் நாள் 23.7.2008.
7. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.438/2008/அ3 நாள் 24.7.2008.
8. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். 10981/ 2008/எம்3, நாள் 13.8.2008.

---

ஆணை:

இராஜபாளையம் நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் 1.11.2006 முதல் பதவியேற்று 42 நகர்மன்ற உறுப்பினர்களுடன், திருமதி. ஆர்.இரத்தினம்மாள் தலைவியாகவும், திரு. சுப்பராஜா, நகர்மன்ற துணைத் தலைவராகவும் கொண்டு இயங்கி வந்தது. இந்நிலையில் திரு.சுப்பராஜா என்பவர் தொடர்ச்சியாக மூன்று நகர்மன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளாததால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 50(1)-ன்படி பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர், திரு.எஸ்.மணிகண்ட ராஜா என்பவர் நகர்மன்ற துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பதவியேற்ற நாள் முதல் நகர்மன்ற தலைவி திருமதி.ஆர் இரத்தினம்மாளுக்கும், துணைத் தலைவர் திரு.எஸ்.ஏ.மணிகண்ட ராஜா என்பவருக்கும் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதன் காரணமாக கடந்த அக்டோபர் 2007 முதல் நகர்மன்ற கூட்டங்கள் சரிவர நடைபெறாமல் நகர்மன்ற உறுப்பினர்களுக்கிடையே ஒத்துழைப்பின்மை ஏற்பட்டு கூச்சல் குழப்பத்தால் கூட்டங்கள் ஒத்திப் போடப்பட்டு வந்தன.

2. திரு என்.ஏ.மணிகண்ட ராஜா மற்றும் சில நகர்மன்ற உறுப்பினர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் நீதிப்பேராணை வழக்கு எண் 3737/2008 இல் நகர்மன்ற தலைவி தன் கடமைகளை சரிவர செயல்படுத்தாமல் இருப்பதாக மதிப்பிட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் நகர்மன்ற கூட்டங்களை சரிவர நடத்த அறிவுறுத்துமாறும் வழக்கு தொடுத்துள்ளனர்.

3. திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தனது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி தலைவி மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் மீது கூறப்பட்ட புகார்கள் பொதுவானவை என்றும் கடந்த ஆறு மாத காலத்தில் நகராட்சி தலைவரால் 9 கூட்டங்கள் கூட்டப்பட்டதாகவும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையால் தள்ளிப் போடப்பட்டதாகவும் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் தேர்தல் காரணமாக 3 கூட்டங்கள் கூட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் முதலாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

i) நகர்மன்ற துணைத் தலைவர் திரு என்.ஏ.மணிகண்ட ராஜா இராஜபாளையம் நகர்மன்றம் சரிவர இயங்கவில்லை என்றும், நகர்மன்ற தலைவி முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு சுப்பராஜா என்பவரின் கைப்பாவையாக செயல்படுகிறார் என்றும் மேலும் நகராட்சி ஆணையர் மீதும் சில குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டு தங்களது இரண்டு மனுக்களை அனுப்பி வைத்துள்ளார். பல குற்றச்சாட்டுகளை மனுதாரர் குறிப்பிட்டிருந்தாலும் நகர்மன்றம் சரிவர இயங்காதது மட்டுமே முக்கியமான குற்றச்சாட்டாக குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ii) மேலும் 12.3.2008 திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அறிக்கையினை பரிசீலனை செய்ததில் இராஜபாளையம் நகராட்சியின் நகர்மன்றக் கூட்டங்கள் சரிவர இயங்கவில்லை என்றும், கடந்த அக்டோபர் 2007 டிசம்பர் 2007 மற்றும் பிப்ரவரி 2008 ஆகிய மாதங்களில் நகர்மன்ற தலைவியால் சாதாரண கூட்டம் கூட்டப்படாமலும் 17.12.2007, 10.1.2008, 5.3.2008 ஆகிய நாட்களில் கூட்டங்கள் கூட்டப்பட்டு நகர்மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பின்மையால் தள்ளிப் போடப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இத்தகைய சிக்கலான நிலைமை காரணமாக கீழே குறிப்பிடப்படுகின்ற பல்வேறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

1. 2008 – 2009 ஆண்டிற்கான நகராட்சி வரவு செலவு திட்டம்
2. 2006 – 2007-க்கான தணிக்கை அறிக்கை
3. 2008 – 2009-க்கான வருவாய் [illegible] இனங்கள்
4. சொத்துவரி சீராய்வு
5. பொது சுகாதார மற்றும் குடிநீர் வாகனங்கள் பழுது பார்த்தல்
6. பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகளுக்கான ஒப்புதல் ஆகிய சமயங்களுக்கு முக்கியமான தீர்மானங்கள் நகர்மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

5. இராஜபாளையம் நகராட்சியின் ஆணையர் தனது 5.3.2008 நாளிட்ட கடிதத்தில், நகர்மன்றம் சரிவர இயங்காததால், பொதுமக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் செய்ய இயலாமல் உள்ளதாகவும் பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்த காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தனது 1.4.2008 நாளிட்ட கடிதத்தில் இராஜபாளையம் நகராட்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் இரு பிரிவுகளாக உள்ளனர் என்றும், ஆகவே, நியாயமான நகர்மன்ற கூட்டங்களை நடத்துவதற்கு தயாராக அவர்கள் இல்லை என்றும், மேலும் நகர்மன்றம் அதற்குரிய பணிகளை சட்டப்படி செயல்படுத்த தவறிவிட்டது என்றும் குறிப்பிட்டு, 1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V, 1920) பிரிவு 41-ன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. இராஜபாளையம் நகராட்சியின் 27.3.2008 வரையிலான செயலாக்கத்தினை நோக்கும் போது, நகர்மன்றம் கடந்த ஆறு மாதங்களாக சரிவர செயல்படாததால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமாக இருந்த இனங்களின் விவரம் கீழ்க்கண்டவாறாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நிலுவையிலுள்ள 67 பணிகளின் மொத்த மதிப்பீடு | : ரூ.185.20 இலட்சம் |
| நகர்மன்ற ஒப்புதலின்றி தீர்வு செய்யப்படாமல் நிலுவையிலுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் மதிப்பீடு | : ரூ.174.14 இலட்சம் |
| நகராட்சி திட்டங்களுக்கு பயன்படுத்தப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் நிதி | : ரூ.174.05 இலட்சம் |
| 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன்படி நகராட்சி ஆணையரால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதி பணிகளுக்கான மதிப்பீடு | : ரூ. 4.40 இலட்சம் (தோராயமாக) |

7. 1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 41-ன்படி கீழ்க்கண்ட சூழ்நிலையில் ஒரு நகர்மன்றத்தினை மாநில அரசு கலைக்கலாம்.

அ) நகர்மன்றம் முறையாகச் செயல்படத் தகுதி இல்லாமல் இருத்தல்; ( Not competent to perform)

ஆ) சட்டத்தின்படியான தனது கடமையை செய்வதில் தொடர்ந்து தவறிழைத்தல்;

இ) அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதும், அதிகார வரம்பை மீறி செயல்படுத்துதலும்.

இராஜபாளையம் நகராட்சியின் நகர்மன்றம் முறையாக இயங்காததால், நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டக் கூறு 243 U (1)-ன் காப்புரை மற்றும் 1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 41-ன் கீழ் அரசிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, அந்நகராட்சியின் நகர்மன்றம் கலைக்கப்படலாம் என அரசு கருதியது. அதனடிப்படையில் நகர்மன்றம் ஏன் கலைக்கப்படக்கூடாது? என்பதற்கான மன்றத்தின் தன்னிலை விளக்கத்தை

-4

கடிதம் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மன்றத்தின் விளக்கம் பெறப்படாவிடில், இந்நேர்வில் தகுதியின் அடிப்படையில் அரசு முடிவு எடுக்கும் என தெரிவித்து நகர்மன்றத்தைக் கேட்டு, நகர்மன்றத்தின் தலைவி வழியாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மூலம் நேரில் சார்வு செய்யப்பட்டது.

8. இராஜபாளையம் நகராட்சியின் நகர்மன்றத் தலைவி தனது மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், அரசால் அனுப்பி வைக்கப்பட்ட தன்னிலை விளக்கம் கோரிய கடிதத்தின்படி இராஜபாளையம் நகராட்சியின் சிறப்புக் கூட்டம் நகர்மன்றத் தலைவியின் தலைமையில் 16.5.2008 அன்று மாலை 4 மணிக்கு கூட்டப்பட்டது என்றும், அக்கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்களின் கட்டுக்கடங்காத சலசலப்பினால் இந்த பொருள் சம்பந்தமாக விவாதம் நடத்தப்படாமல் நிர்பந்தத்தால் எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் கூட்டம் முடிவுற்றது என்றும், நகர்மன்றத் தலைவி தெரிவித்துள்ளார். மேலும், சிறப்பு கூட்டம் முடிந்த பின்பு அப்பொழுதே சட்ட விரோதமாக சில நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் கூட்டியதாகவும், தீர்மானங்களை நிறைவேற்றியதாகவும் கூறி ஆணையாளரிடம் அதை சமர்ப்பித்து அவரை கூட்டம் நடந்ததாக கையொப்பமிட வற்புறுத்தியதாகவும் தெரிய வருகிறது என்றும், அவர் தெளிவாக இந்த கூட்டம் கூட்டியது சட்ட விரோதம் என்று அவர்களை கண்டித்துள்ளதாகவும், அதோடு கூட்ட நடவடிக்கை என்று சொல்லி ஒரு மனுவை ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் 1920ஆம் ஆண்டின், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 13-ன்படி கூட்டத்தை கூட்டுவதற்கு நகர்மன்ற தலைவருக்குத்தான் அதிகாரம் உள்ளது என்றும், ஆகவே மேற்சொன்ன சட்டம் அத்தியாயம் 15-ல் சட்டப்பிரிவு 313 (1) (பி)-ன்படி தண்டிக்கத்தக்க செயலாகும் என்றும் அவர்கள் கூட்டிய கூட்டம் சட்டவிரோதம் மற்றும், தண்டிக்கத்தக்கதாகும் என்றும், இதனை பரிசீலனை செய்து நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் 22 உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்கண்ட சூழலில் நகர்மன்றம் ஏன் கலைக்கப்படக்கூடாது என்பதற்கான மன்றத்தின் தன்னிலை விளக்கத்தினை கடிதம் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்ட நிலையில், அதற்குரிய தெளிவான பதில் ஏதும் அளிக்காமல் நகர்மன்ற துணைத் தலைவர் முதலான 23 நகர்மன்ற உறுப்பினர்கள் சட்டவிரோதமாக கூட்டம் நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

9. இதற்கிடையில் திரு.எஸ்.மணிகண்டராஜா மற்றும் திரு.எஸ்.மணி ஆகியோர் அரசால் அனுப்பி வைக்கப்பட்ட தன்னிலை விளக்கம் கோரும் கடிதத்திற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.12769/2008 மற்றும் 12770/2008 ஆகிய வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றத்தின் 27.5.2008 நாளிட்ட இடைக்காலத் தீர்ப்பில், தன்னிலை விளக்கம் கோரப்பட்டதின் மீதான அரசின் ஆணையினை இருவாரங்களுக்கு நிறுத்தி வைக்குமாறும், முதல் பிரதிவாதியான செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு ஆணை பிறப்பிக்க உத்தரவு பிறப்பித்தும் ஆனால், மனுதாரர்களுக்கு தங்களது வாதத்தினை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் மற்றும் நேரடி விசாரணை அளிக்க வேண்டுமெனவும் ஆணையிட்டுள்ளது அதனடிப்படையில் மனுதாரர்கள்

5

திரு.எஸ்.மணிகண்டராஜா மற்றும் எஸ்.மணி ஆகிய இருவரும் தன்னிலை விளக்கம் கோரும் அரசின் கடிதத்திற்கான விளக்கம் அளிக்க தங்களுக்கு அனுமதி வழங்குமாறு கோரி அரசுக்கு மனு சமர்ப்பித்தனர். ஆனால் 1920-ம் ஆண்டு நகராட்சிகள் சட்டம் பிரிவு 41-ன்படி மனுதாரர்கள் தங்கள் வாதத்தை எடுத்துரைப்பதற்கோ அல்லது நேரடி விசாரணைக்கோ வழிவகை செய்யப்படவில்லை.

10. மேற்காணும் வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் 9.7.2008 அன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது.

> "ஏழாவது பிரதிவாதியான நகர்மன்ற தலைவி ஆறாவது பிரதிவாதி ஆணையருக்கு காரணம் கேட்கும் 7.5.2008 நாளிட்ட கடிதம் தொடர்பான அஜந்தா 14.7.2008-க்குள் அனுப்பப்பட வேண்டும். 23.7.2008 அன்று 4 மணிக்கு நகர்மன்றக் கூட்டம் நிர்ணயித்து அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் நகராட்சி ஆணையர் தெரிவிக்க வேண்டும். நகர்மன்ற உறுப்பினர்கள் அஜந்தாவை அன்று பரிசீலிக்கவும் நகர்மன்றத் தலைவி கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை அரசுக்கு அனுப்புவார். அதனை அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்றும் நகர்மன்ற கூட்டம் நடைபெறும் நாளான 23.7.2008 அன்று விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிபதி பார்வையாளராக செயல்படுவார்".

11. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.12769/08 (ம) 12770/08-ல் 9.7.2008 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி பலவகை மனு எண். 1/08, 2/2008-ல் 23.7.2008 நாளைய நகர்மன்றக் கூட்டத்துக்கான மன்றக் கூட்டப் பொருளை நகர்மன்றத் தலைவர் தயார் செய்து 14.7.2008 ஆணையாளரிடம் அளித்தார். ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதியரசர் அவர்கள் முன்னிலையில் 23.7.2008 அன்று மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூட்டம் நடைபெற்றது. அதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 41-ன் கீழ் இம்மன்றத்தை ஏன் கலைக்கக்கூடாது என்பதற்கான காரணம் கேட்டு வந்த அரசு கடிதம் எண். 3303/நக5/ 2008-13 நாள் 7.5.2008-ன் மீது இராஜபாளையம் நகர்மன்ற உறுப்பினர்களில் 24 உறுப்பினர்கள் நகர்மன்றத்தை கலைக்க கூடாது என்ற கருத்தையும், நகர் மன்ற தலைவர் மற்றும் இதர 17 உறுப்பினர்கள் நகர்மன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்தையும் எழுத்து மூலமாகத் தெரிவித்து அதனுடன் நகர்மன்றத் தலைவரின் கருத்தும் சேர்க்கப்பட்டு, தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

12. நகராட்சி நிர்வாக ஆணையரின் எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகர்மன்றத்தை ஏன்கலைக்கக் கூடாது என்ற அரசின் வினாவிற்கு தக்க விளக்கத்தினை நகர்மன்றம் அளிக்கவில்லை என்றும், 1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 41-ன்படி இராஜபாளையம் நகர்மன்றத்தின் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

13. இப்பொருள் குறித்த அனைத்து ஆவணங்களையும் அரசு கவனமுடன் பரிசீலித்தது. இராஜபாளையம் நகராட்சியில் காலதாமதமின்றி செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் நகர்மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தற்போதும் நிலுவையில் உள்ளதாலும், கடந்த ஒன்பது மாதங்களாக நகர்மன்றம் சரிவர செயல்படாததால் அனைத்து நலத்திட்டங்களும் இன்னும் செயல்படுத்தப்படாமல் உள்ளதாலும், 2008-2009ம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட நிதிகளைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய நலத்திட்டப் பணிகளை தேர்வு செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் 2008-2009 ஆம் ஆண்டுக்குரிய நிதியை செலவிடுவதில் தேய்வு ஏற்பட்டுள்ளதாலும், நகர்மன்றம் கடந்த ஒன்பது மாதங்களாக முறையாகச் செயல்படாததால் அத்தியாவசியப் பணிகளாகிய குடிநீர் வழங்கல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சரிவர தொடர்ந்து செயல்படுத்த இயலாத நிலை உள்ளதாலும், அரசு நிதி சம்பந்தமான ஏனைய நலத்திட்டப் பணிகளைச் செயல்படுத்த இயலாத நிலை உள்ளதாலும், நகர்மன்றம் சட்டப்படியான தனது கடமையைத் தொடர்ந்து செய்யாத காரணத்தினால் நகராட்சியில் அனைத்து பணிகளும் முடங்கும் நிலை உள்ளதாலும் ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்ட மன்றப் பொருள்களுடன் தற்போதைய பொருள்களையும் சேர்த்து 312 மன்றப் பொருள்கள் நகர்மன்றத் தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டதிலிருந்து ராஜபாளையம் நகர்மன்றம் தொடர்ந்து தனது கடமைகளை ஆற்றுவதில் தவறி வருவது தெளிவாவதாலும், இராஜபாளையம் நகரில் வாழும் மக்களுக்கு சென்று அடைய வேண்டிய பணிகளும் சேவைகளும் வெகுவாக பாதிக்கப்பட்டு தடைபட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 41(1)-ன் கீழ் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இராஜபாளையம் நகர்மன்றத்தை கலைத்து அரசு ஆணையிடுகிறது.

14. மேலும், இராஜபாளையம் நகர்மன்றத் தலைவரின் பொறுப்புகளையும், நகர்மன்றத்தின் பொறுப்புகளையும். ஏற்று செயல்படுத்த 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 41(3) (b)-ன்படி நகர்மன்றம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலியை தனி அலுவலராக நியமித்தும் பிரிவு 41(1) (b)-ன்கீழ் புதிய நகர்மன்றத்தை அமைப்பதற்கான நாளாக 20.3.2009-யை நிர்ணயித்தும் அரசு ஆணையிடுகிறது.

15. மேலே பத்தி 13 மற்றும் 14-இல் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்குமுகத்தான், இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ள அறிவிக்கை 15.10.2008-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் (Tamil

Nadu Government Gazettee Extraordinary) வெளியிடப்படுகிறது. இந்த ஆணை மற்றும் அறிவிக்கைகளின் அடிப்படையில் தேவையான அனைத்து மேல்நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஆகியோரை இவ்வாணையின் மூலம் அரசு அறிவுறுத்துகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே. தீனபந்து,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-600 079.
(அரசிதழில் விளம்பலறிவிக்கை வெளியிடுவதற்காகவும் அறிவிக்கையின் 50 நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை- 600 005.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி.
இராஜபாளையம் நகர்மன்றம், இராஜபாளையம் (நகர்மன்றத் தலைவர் வழியாக)
நகராட்சி ஆணையர், இராஜபாளையம் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம்.
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அரு2 மற்றும் தேர்தல்) துறை, சென்னை- 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 15/10/08